**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 186/2024**

**09.04.2026.**

**PW- 2**

**வா.சா.2.ஆசைதம்பி, த/பெ. மாரியப்பன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2, 5 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் சேராங்குளத்தில் வசிக்கிறேன். கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சேராங்குளத்தில் வசித்து வருகிறேன். வாதி, பிரதிவாதிகளை எனக்கு நன்கு தெரியும். எனக்கு உறவினர்கள் தான். வழக்கு சொத்துக்கள் சம்மந்தப்பட்ட பத்திரங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் -இல்லை. வழக்கு சொத்துக்கள் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் - தெரியும். எவ்வாறு சர்வே எண் தெரிந்துக்கொண்டேன் என்றால் - பத்திரத்தை பார்த்து தெரிந்துக்கொண்டேன். யார் யாருக்கு எந்த வருடம் எழுதிக்கொடுத்த பத்திரம் என்றால் - அதுபற்றி தெரியாது. வாதி, பிரதிவாதிகளுக்குள் விரோதம் கிடையாது. பிரதிவாதி தனபாக்கியத்தம்மாளை எனக்கு தெரியும். தனபாக்கியத்தின் இளைய மகள் சாந்தியை எனக்கு தெரியும். தனபாக்கியத்தம்மாள் உயிருடன் இருக்கிறார். தனபாக்கியத்தம்மாள் அவரது கணவர் விட்டுச் சென்ற சொத்துக்கள் குறித்து அவரது மகள்களுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் -எனக்கு தெரியாது. தனபாக்கியத்தம்மாள் மற்றும் அவரது இளைய மகள் சாந்தி என்ன கட்சியாடி வருகிறார்கள் என்றால் - சொத்து அவர்களுக்கு சொந்தம் என்று சொல்லி வருகிறார்கள். நான் தனபாக்கியத்தின் குடும்ப விவரம் தெரியாது என்றாலும் பத்திரம் எதையும் பார்த்து இல்லை என்றாலும் வாதி கேட்டுக்கொண்டதால் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.